Regional Bulletin / Puducherry / Tamil /18.10 / 29.09.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

நாள் : 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மகாராஷ்டிராவில் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்து வேறு பல திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

புதுச்சேரியின் மாஹே பகுதியில் கடற்கரை முழுவதும் தூய்மைப் பணி பராமரிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் குறிப்பிட்டு பாராட்டி உள்ளார்.

பண்டிகை காலங்களில் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுச்சேரி கடற்கரை சாலையில் ரேபிஸ் விழிப்புணர்வு பேரணியை சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

*பிரதமர் மகாராஷ்டிரா -1 (16)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மகாராஷ்டிராவில் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து ஸ்வர்கேட் வரையிலான புனே மெட்ரோ ரயில் பிரிவு, சோலாப்பூர் விமான நிலையத்தையும் பிரதமர் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், புனே நகரின் வளர்ச்சிக்கும், மக்களின் எளிதான வாழ்க்கைக்கும் தேவையான வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். பொருளாதார வளர்ச்சி என்பது மக்களுக்கு முழு போக்குவரத்து வசதி கிடைக்கும்போதுதான் சாத்தியமாகும் என்று பிரதமர் தெரிவித்தார். இதற்கு அடையாளமாக தற்போது சோலாப்பூர் விமான போக்குவரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிட்கின் தொழிற்துறை பகுதியையும் பிரதமர் இன்று திறந்து வைத்தார். இது மத்திய அரசின் தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 7 ஆயிரத்து 855 பரப்பளவை உள்ளடக்கிய திட்டமாகும்.

*பிரதமர் மகாராஷ்டிரா -2 (6)*

இத்திட்டம் மிகப்பெரிய முதலீட்டை ஈர்ப்பதோடு, இப்பகுதியில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மகாராஷ்டிரா ஆளுநர் திரு. சி.பி. இராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர் திரு. முரளிதர் மொஹோல், முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, துணை முதலமைச்சர்கள் திரு. தேவேந்திர பட்நாவிஸ், திரு. அஜீத் பவார், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*மனதின் குரல் -1 (17)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி அகில இந்திய வானொலியில் மக்களோடு கலந்துரையாடிய மனதின் குரல் நிகழ்ச்சியின் 114ஆவது நிகழ்ச்சி இன்று காலை ஒலிபரப்பாகியது. இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், மனதின் குரல் நிகழ்ச்சி ஒலிபரப்புத் தொடங்கி 10 ஆண்டுகள் நிறைவடைந்து இருப்பதாகத் தெரிவித்துள்ளார். 10 ஆண்டுகளுக்கு முன்பாக அக்டோபர் 3ஆம் தேதியன்று விஜயதசமி நாளன்று தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சியை ஆர்வத்தோடு அரவணைத்து கொண்டு இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். ஒவ்வொரு பகுதியிலும் புதிய கதைகள், புதிய ஆளுமைகள் இணைந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

சமூக உணர்வோடு அரங்கேறும் செயல்களுக்கு மனதின் குரல் வாயிலாக கவுரவம் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியை மக்களிடம் கொண்டு சேர்த்துள்ள தூர்தர்ஷன், பிரசார் பாரதி, அகில இந்திய வானொலி மற்றும் அவற்றோடு தொடர்புடைய அனைவரையும் பிரதமர் பாராட்டினார்.

வரும் அக்டோபர் மாதம் 2ஆம் தேதி தூய்மை இந்தியா இயக்கத்தின் 10 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், இந்திய வரலாற்றில் மிகப் பெரிய மக்கள் இயக்கமாக மாற்றியிருக்கும் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

*மனதின் குரல் -2 (17)*

வாழ்க்கை முழுவதும், தூய்மை என்ற நோக்கத்திற்காக தம்மையே அர்ப்பணித்து வாழ்ந்த மகாத்மா காந்தி அவர்களுக்கு அளிக்கப்படும் உண்மையான மரியாதை இதுதான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் உருவாக்குவோம் என்ற மற்றொரு மகத்தான இயக்கமும் 10 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். பல்வேறு உற்பத்தித் துறையிலும் இதன் காரணமாக ஏற்றுமதி அதிகரித்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். பண்டிகை காலங்களில் பழைய உறுதிப்பாட்டை மறந்துவிடாமல், உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். எந்தப் பொருளை வாங்கினாலும், பரிசாக கொடுத்தாலும்

அது இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். தூய்மைத் தொடர்பாக புதுச்சேரி கடற்கரைப் பகுதியிலும், பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாஹே நகராட்சி மற்றும் அருகில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களின் குழு ஒன்றை ரம்யா என்ற பெண் உருவாக்கி கடற்கரைப் பகுதியை முழுமையான வகையில் தூய்மையானதாக மாற்றியுள்ளதை பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். தூய்மை இயக்கம் ஒரு நாளோ அல்லது ஒரு ஆண்டோ நடந்து முடிந்துவிடும் இயக்கம் அல்ல என்று கூறிய அவர், இந்த



இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றி காரணமாக கழிவுகளில் இருந்து செல்வம் என்ற மந்திரம் அனைவருக்கும் பிடித்தமாகி உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். கழிவுகளை குறைத்தல், மறு சுழற்சி செய்தல் ஆகியவற்றைப் பற்றி மக்கள் பரவலாக அறிந்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார். கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த 74 வயதுடைய சுப்ரமணியன் என்பவர் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாற்காலிகளை சீர்செய்து இவற்றை மறு பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதை பிரதமர் சுட்டிக் காட்டினார்.

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ள அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கம் மக்களின் பங்களிப்புடன் அதிசயத்தை நிகழ்த்தி காட்டியிருப்பதாக பிரதமர் தெரிவித்தார். உத்தரப்பிரதேசம், குஜராத், மத்திய பிரதேசம், இராஜஸ்தான், தெலங்கானா, ஆகிய மாநிலங்கள் இலக்கை மிஞ்சி அதிக எண்ணிக்கையில் மரங்களை நட்டு சாதனை படைத்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார். இந்த உன்னதமான இயக்கத்தில் அனைவரும் இணைய வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*மனதின் குரல் -4 (6)*

தமிழ்நாட்டின் மதுரையை அடுத்த வரிச்சியூர் கிராமத்தைச் சேர்ந்த சுபஸ்ரீ என்ற பெண் தனது சொந்த முயற்சியால் 500க்கும் மேற்பட்ட மூலிகை செடிகளை சேகரித்து மூலிகை பூங்கா ஒன்றை அமைத்திருப்பதை பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். கொரோனா காலத்தில் இவரது பூங்காவில் இருந்த மருத்துவ மூலிகைகள் மக்களுக்கு பயனளித்ததாக பிரதமர் தெரிவித்தார். இந்த பூங்காவை காண வெகு தொலைவில் இருந்தும் பலர் வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

*ஜெய்சங்கர் (13)*

பாகிஸ்தானின் எல்லைக் கடந்த பயங்கரவாத கொள்கை ஒருபோதும் வெற்றி அடையாது என்றும், பாகிஸ்தானின் இந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பின் விளைவுகள் சந்திக்க நேரிடும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். நியூயார்க்கில் நடைபெற்ற ஐ.நா சபையின் 79ஆவது கூட்டத்தில் உரையாற்றிய அவர் பாகிஸ்தான் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள இந்திய பகுதியை விட்டு வெளியேறுவதுடன், நீண்ட காலமாக பயங்கரவாதத்துடன் வைத்துள்ள தொடர்பை அந்த நாடு கைவிட்டால்தான் இரு நாட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தானின் தீய செயல்களை அனைத்து நாடுகளும், பார்த்துள்ளதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். ஐநா சபையில் செயல்திறன் மிக்க அதிக பிரதிநிதித்துவம் தேவை என்று வலியுறுத்திய அவர், சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*இத□ தினம் (16)*

சர்வதேச இதய தினம் இன்று கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 29ஆம் தேதி உலக இதய தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதய நோய்கள் மற்றும் இதயம் சம்மந்தமான

பிரச்சனைகள் குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு அதிகரிக்க இந்த நாள் இதய தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இதய நோய் தடுப்பு செயலுக்கு இதயத்தை பயன்படுத்துங்கள் இதய நோயை தடுக்கும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க மக்களை ஊக்கப்படுத்துங்கள் என்ற தலைப்பில் உலக இதய தினம் கடைபிடிக்கப்படுகிறது. உலக இதய தினத்தை முன்னிட்டு தலைநகர் டெல்லியில் இன்று இந்தியா கேட் பகுதியில் இருந்து - பாரத் மண்டபம் வரை, 3 கிலோமீட்டர் தூர மராத்தான் ஓட்டம் நடைபெற்றது. மத்திய சிறுபான்மையினர் நலன் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இந்த மராத்தான் நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். இதயத்தின் ஆரோக்கியத்தை பேணி காக்கவும் அவர் மக்களுக்கு அறிவுறுத்தி உள்ளார். இந்த விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தில் 150 இதய நோயாளிகள் மற்றும் 100 மருத்துவர்கள் உட்பட 800க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

*தமிழக அமைச்சரவை (11)*

தமிழக அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திரு. செந்தில் பாலாஜி, திரு. கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோருக்கு அமைச்சரவையில் வாய்ப்பளிக்கப் பட்டுள்ளதோடு சில

அமைச்சர்களின் இலாக்காக்களம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் இன்று பிற்பகல் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் கோவி. செழியனுக்கு உயர்கல்வித்துறையும், அமைச்சர் திரு. செந்தில் பாலாஜிக்கு மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையும், அமைச்சர் திரு. ராஜேந்திரனுக்கு சுற்றுலாத்துறையும், அமைச்சர் திரு. நாசருக்கு சிறுபான்மை நலத்துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

*ரேபிஸ் (7)*

புதுச்சேரி பிராணிகள் நலன் மற்றும் பாதுகாப்பு இயக்கம், மத்திய விலங்குகள் நல வாரியம் ஆகியவை இணைந்து ரேபிஸ் தடுப்பு விழிப்புணர்வு பேரணி கடற்கரை காந்தி திடல் அருகே இன்று நடைபெற்றது. பேரணியை சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் தொடக்கி வைத்தார். இந்தப் பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ – மாணவிகள் பங்கேற்று நகரின் முக்கிய வீதிகளில் பேரணியாகச் சென்று ரேபிஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

*படகு போட்டி (8)*

காரைக்கால் மாவட்டத்தில் உலக சுற்றுலா தின விழா நேற்று தொடங்கியது. 2ஆம் நாளான இன்று மாவட்ட நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை, சுற்றுலாத்துறை ஆகியவை சார்பில் அரசலாற்றில் படகு போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் காரைக்காலில் உள்ள 11 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பங்கேற்றனர். படகு போட்டியை காரைக்கால் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மணிகண்டன் கொடியசைத்து தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. கோவிந்தராஜ் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், மீனவ பஞ்சாயத்தார்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*விண்கலம் (8)*

சர்வதேச விண்வெளி மையத்தில் ஸ்டார் லைனர் விண்கலனில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அங்கு தங்கியுள்ள சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோரை பூமிக்கு அழைத்து வர க்ரு-9 விண்கலத்தை நாசா விண்ணுக்கு அனுப்பி உள்ளது. ஸ்பேஸ் எக்ஸ் உதவியின் மூலம் கடந்த 3 மாதங்களாக விண்வெளியில் சிக்கியுள்ள அவர்களை மீட்கும் நடவடிக்கையாக இந்த விண்கலம் விண்ணில்

செலுத்தப்பட்டுள்ளது. வரும் பிப்ரவரி மாதம் இருவரும் பூமிக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*பஞ்சா□த்து ராஜ் (8)*

மத்திய பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் நாளை புதுடெல்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் அனைவருக்குமான வளர்ச்சி தொடர்பான மக்கள் திட்ட பயிலரங்கை தொடங்கி வைக்க உள்ளார். இந்த பயிலரங்கு பல்வேறு மத்திய அமைச்சர்கள், துறைகள், மாநில அரசு துறைகளின் பிரதிநிதிகள், பயிற்சி நிறுவனங்களின் ஆசிரியர்கள், பஞ்சாயத்துக்களின் பல்வேறு நிலைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளும்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மகாராஷ்டிராவில் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்து வேறு பல திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

புதுச்சேரியின் மாஹே பகுதியில் கடற்கரை முழுவதும் தூய்மைப் பணி பராமரிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் குறிப்பிட்டு பாராட்டி உள்ளார்.

பண்டிகை காலங்களில் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுச்சேரி கடற்கரை சாலையில் ரேபிஸ் விழிப்புணர்வு பேரணியை சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / BR / RK